# யாழ் குடா நாட்டில் தொழிலுக்காக புலம்பெயர்ந்த குடும்பங்களின் நிலை பற்றிய ஆய்வு.

## அபிவிருத்திக்கான சமூக நிறுவனங்களின் வலையமைப்பு

நிதியளிப்பு

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**Swiss Agency for Development and Cooperation SDC**

# Study on the Migrant

# ( for Empolyement)

# families situation

in

# Jaffna District.

## Conducted By:

## Social Organizations Networking

for

## Development.

## Funded By:

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**Swiss Agency for Development
and Cooperation SDC**

# நன்றி கூறுகின்றோம்

இத் திட்டத்திற்காக நமக்குப் பல்வழிகளிலும் உதவியவர்கள் ஆலோசனை வழங்கியவர்கள் ஆய்வில் ஈடுபட்ட பணியாளர்கள், குழு நிலைக் கலந்துரையாடல்களில் ஈடுபட்ட பொதுமக்கள், இவ் ஆய்வை தொகுத்து தந்த தகவல்வள உத்தியோகத்தர், இவ் ஆய்விற்கு தகவல்களை சேகரித்து தந்த களப்பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ச.செந்துராசா**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**SOND**
**18/10 வைமன் வீதி,**
**நல்லூர்.**

**Ph- 067 2226700**
Mob-077 331 4262
**e mail:senthu@eureka.lk**

# முன்னுரை

பாதுகாப்பான தொழிலாளர்கள் புலம்பெயர்வு செயற் திட்டத்தில் கிராமங்களில் நாம் புலம்பெயர்ந்த குடும்பங்களோடு பணியாற்றுகின்ற பொழுது எமக்கு ஏற்பட்ட அனுபவம் இந்த ஆய்வை செய்யத் தூண்டியது. இதை ஒரு ஆழமான ஆய்வாக செய்யமுடியாவிட்டாலும் கூட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களில் உள்ள நிலைபற்றி ( Family Situation) அறிந்து கொள்ள இவ் ஆய்வு எமக்கு உதவியாக இருக்கும். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குடும்பங்கள் பல்வேறுபட்ட கஸ்ரங்களையும் பிரச்சனைகளையும் எதிர்கொள்ளுவதை நாம் அவதானித்தே இவ் ஆய்வு செய்யும் முடிவுக்கு வந்தோம்.

இவ் ஆய்வு செய்கின்ற பொழுது நாம் விஞ்ஞான பூர்வமான சில அணுகுமுறைகளை கைக்கொண்டாலும் கூட யதார்த்தமான பல அணுகுமுறைகளையே கடைப்பிடித்திருந்தோம். வெறுமனே புள்ளிவிபரங்கள், தரவுகள் பற்றிய ஆழமான பார்வையை செலுத்தாது மக்கள் தற்போது வாழுகின்ற நிலை என்ன, புலம்பெயர்ந்த குடும்பங்களில் இருக்கின்ற பிரச்சனைகள் என்ன, இவர்கள் அதிகமாக நாடுகின்ற விடயங்கள் எவை, இது எவ்வாறான பாதிப்பை இக்குடும்பங்களிடையே ஏற்படுத்தியுள்ளது, இவற்றுக்கான மாற்றுவழியை தேடுவதற்கான உபாயம் என்ன? இக்குடும்பங்களின் நிலையை உயர்த்துவதற்கான வாய்ப்புக்கள் சந்தர்ப்பங்கள் என்னென்ன இருக்கின்றன போன்ற விடயங்கள் மீதே அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இவ் அறிக்கையானது இச்செயற்பாட்டில் ஈடுபட விரும்புகின்ற தனிநபர்களுக்கோ சமூக ஆர்வலர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது அரச திணைக்களகங்களுக்கோ விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியவாறு என்னென்ன விடயங்களில் நாம் கவனம் செலுத்தவேண்டுமென்ற ஓர் எண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் பல ஆய்வுகள் மிக மேலோட்டமான பார்வையோடு அல்லது புள்ளிவிபரத் தகவல் சேகரிப்போடு அவை யாருக்கும் பயன்படுத்தாமல் இருப்பதை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டோம்.

இத்திட்டத்தில் நாம் பணியாற்றுகின்ற காரணத்தினாலும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுடைய வாழ்வைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அல்லது அக்கறை கொள்ளவேண்டிய அதிகாரிகள், நிறுவனங்கள் அல்லது சமூக அமைப்புக்கள் இதன் மீது முன்னுரிமை செலுத்தாத காரணத்தினாலும் இவர்கள் அனைவரும் இணைந்து செயற்பட்டால் புலம்பெயர்ந்த குடும்பங்களின் வாழ்வில் ஓர் மாற்றத்தை கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்திலும் நாம் இந்த ஆய்விற்கான பார்வையை வைத்துக்கொண்டோம்.

இவ் ஆய்வானது ஏற்கனவே செய்யப்பட்ட பல ஆய்வுகளுடன் ஒப்புநோக்குகையில் சற்று வித்தியாசமானது. இது முழுக்க முழுக்க குறிப்பிட்ட 4 பிரதேச செயலகங்களிலுள்ள புலம்பெயர்ந்த குடும்பங்கள் பற்றிய ஆய்வாகவே இது இருக்கின்றது. ஆனால் நாம் யாழ் குடாநாட்டின் நிலமைகளை ஆராய்ந்த பொழுது இந்த ஆய்விலே காணப்பட்ட விடயங்கள் யாவும் பொதுவாகவே இம் மாவட்டத்திற்கு மிகவும் பொருத்தமானதாகவே காணப்பட்டுள்ளது. இன்னும் ஆழமாகப் பார்க்கப்போனால் இது போன்ற ஆய்வுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்யப்பட வேண்டிய அவசியத்தை இந்த ஆய்வு எமக்கு உணர்த்தியது.

நாம் ஒரு செயற்திட்டம் என்ற முறையிலே மேலோட்டமாக விடயங்களை பார்க்காது நாம் என்னென்ன விடயங்கள் மீது எவ்வாறு கவனம் செலுத்தவேண்டும் என்பதைஇந்த ஆய்வு எமக்கு எடுத்துக்காட்டுகிறது. அந்த வகையில் இந்த ஆய்வை நாம் திட்டமிட்டு செய்து இருக்கின்றோம். இது இத்துறையில் ஆர்வம் கொள்பவர்களுக்கு இது ஒரு கைவிளக்காக இருக்கும் என்பது தான் எமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

# ஆய்வின் நோக்கம்

புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களின் நிலையை உணர்வதும் அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து அவர்களுடைய பாதக நிலையை குறைப்பதும், அதற்கான தகவல்களைப் பெறுவதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு செய்யப்பட்ட முறை

இவ் ஆய்வுக்கு என்று தொழிலாளர்களின் குடும்பங்களில் காணப்படுகின்ற பிரச்சகைளை அவதானித்து அவ் அவதானத்தின் அடிப்படையில் நாம் இக் குடும்பங்களில் தகவல் திரட்டுவதற்கான கேள்வி கொத்து ஒன்றை தயாரித்தோம்.

இக் கேள்வி கொத்தை எமது பணியாளர்கள் இக்குடும்பங்களுக்கு எடுத்துச்சென்று அவர்களுடன் கலந்துரையாடித் தகவல்களைப் பெற்றார்கள். இக் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பூரணமாக தமது தகவல்களை எமது பணியாளர்களுக்கு தெரிவிக்கவில்லை என்ற குறைபாடும் இங்கே ஆய்வு செய்யப்பட்ட பொழுது அவதானிக்கப்பட்டது. அத்தோடு ஆய்வுசெய்பவர்களுடைய அனுபவ குறைவும் இவ் ஆய்வில் பல்வகையான பாதகநிலமைகளை எமக்கு ஏற்படுத்தியது. இருப்பினும் கூட கலந்துரையாடல்கள் , ஆய்வு படிவத்தைநிரப்புதல் நிரப்பப்பட்ட தகவல்களை கலந்துரையாடல் மூலம் உறுதி செய்தல், குழுநிலை கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் பல்வேறு தகவல்கள் திரட்டப்பட்டு உறுதிசெய்யப்பட்டது.

## ஆய்வுப் பிரதேசங்கள்

ஆய்வு பிரதேசங்களாக கரவெட்டி, பருத்தித்துறை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகள் யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டன.

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் இமையாணன் மேற்கு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி கிழக்கு, காரணவாய் தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் கற்கோவளம், அல்வாய் மேற்கு, வல்வெட்டித்துறை வடக்குமேற்கு, வல்லிபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் சண்டிலிப்பாய் மத்தி, ஆனைக்கோட்டை, பெரியவிளான், இளவாலை ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் சங்கானை மேற்கு, சித்தங்கேணி, அராலி கிழக்கு, அராலி மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

மேற்குறித்த நான்கு பிரதேசப்பிரிவில் உள்ள பதினாறு கிராம சேவகர் பிரிவுகளிலும் புலம் பெயர்ந்த குடும்பங்களிடையே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புலம்பெயர்ந்த மக்களின் நிலையை உணர்ந்து கொள்வதற்காக பல்வேறு தலைப்புகளில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு அவை தொகுக்கப்பட்டுள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன.

**1. இம்மக்கள் புலம்பெயர்ந்த நாடு தொடர்பான ஆய்வை மேற்கொண்டபோது**

**கட்டார் நாட்டில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 50 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 54% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 52 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 24% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 83 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 46.3% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 62 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 42% ஆகும்.

**டோகாவில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் ஒருவர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 60 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 27% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 47 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 26% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 42 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 28.7% ஆகும்.

**சவுதி அரேபியாவில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 25 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 27% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 15 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 7% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 28 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 15% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 28 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 19% ஆகும்.

**குவைத் நாட்டில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 3 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 5 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 2% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 3 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 1.6% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் ஒருவர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 0.6% ஆகும்.

**டுபாய் நாட்டில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 3 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 2 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 0.9% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 7 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.9% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 4 பேர் தொழிலுக்காக இடம்பெயர்ந்து இருக்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 2.7% ஆகும்.

**இவ் ஆய்வின்மூலம் கட்டார் நாட்டிற்கும் சவுதி அரேபியாவிற்கும் அதிக அளவு தொழிலாளர்கள் சென்றதை அறியக்கூடியதாக இருந்தது. ஏனைய நாடுகளில் மிகக் குறைந்த தொழிலாளர்கள் சென்றிருக்கின்றார்கள்.**

**இந் நாடுகளில் கட்டார் நாட்டில் மனித சுதந்திரங்கள் மற்றும் கலாச்சாரம் உணவுமுறைகள் வேலைகள் என்பன எமது தொழிலாளர்களுக்கு இசைவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அதிகளவு வேலையாட்கள் அங்கு செல்வதாக குறிப்பிட்டிருந்தார்கள்.**

**அதே போன்று அடுத்து அதிகமாக சென்ற நாடாக சவூதி அரேபியா காணப்படுகின்றது. இங்கேயும் ஏனைய அரபு நாடுகளுடன் ஒப்பிடுகையில் சட்டதிட்டங்கள் அதிகமானாலும் ஓரளவிற்கு சமாளிக்கக் கூடிய நிலை இருக்கிறது என்றும், தொழில் ரீதியான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

2. **இம்மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளுகின்ற தொழில் தொடர்பான ஆய்வை மேற்கொண்டபோது**

**கூலித்தொழில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 14 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 9.6% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 38 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 21% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 24 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 13% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 41 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 31% ஆகும்.

**தொழிலாளர்கள் செய்யும் தொழில்கள் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்ட பொழுது கூலித் தொழிலாளர்கள் அதிகமாக சென்றிருக்கிறார்கள். இவ்வாறு கூலித் தொழில் என்று செல்பவர்கள் நடைமுறையிலே பல சிரமத்திற்கு ஆளாவதாக தெரிகின்றது. வேலை குறிப்பிடாமல் பொதுவாக கூலித் தொழிலில் இறங்குகின்ற பொழுது செல்கின்ற நாட்டிலே அவர்கள் எல்லாவிதமான கூலி வேலைகளையும் செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.**

**கூலித் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு தொழிலுக்கு செல்லுகின்ற பொழுது அங்குள்ளவர்கள் கூறுகின்ற வேலையையே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இவர்கள் சான்றளிக்கப்பட்ட குறித்த ஒரு தொழிலுக்கு செல்வார்களாயின் அவர்களுடைய வேதனம் அதிகரிப்பதோடு குறித்த தொழிலை மட்டும்செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் இங்குள்ள கூலித்தொழிலாளர்கள் பலர் பல சிரமங்களை எதிர் கொள்வதற்கு இவர்கள் குறித்த ஒரு தொழிலை தெரிவு செய்யாமையும் குறித்த தொழிலுக்கான சானறிதழ் பெறாமையும் காரணமாக உள்ளது.**

**தற்போது நடைமுறையில் இருக்கின்ற RPL சான்றிதழ் பெறும் திட்டத்தின் கீழே இவர்கள் தமது தொழில் அனுபவத்தை உறுதி செய்து கொண்டு செல்லும் பட்சத்தில் இவர்களின் வேதனம் அதிகரிக்கவும் இவர்கள் கௌரவமாக தொழில் செய்யவும் வழி ஏற்படும் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதற்கான விழிப்புணர்வை வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.**

**சுத்திகரிப்புத்தொழில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 3 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 10 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 4% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 2 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 1.1% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 40 பேர் இது மொத்த எண்ணிக்கையில் 25.2% ஆகும்.

**தொலை தூர இடங்களிலே வேலை செய்தல் வெய்யிலில் தாங்கமுடியாத வெப்பத்தில் நின்று வேலை செய்யும் சுத்திகரிப்பு வேலைகள் உடலுக்கு அதிக பழுவைக் கொடுக்கின்ற வேலைகள் போலவும் கருத இடமுண்டு. சில தொழிலாளர்கள் அவ் வேலை சுலபம் எனக்கருதிச் சென்றிருக்கிறார்கள்.**

**தச்சு வேலை**

பருத்தித்துறை பிரதேசத்தில் 3 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 9 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 4% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 11 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 6% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 11 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 7.5% ஆகும்.

**மின்சார பொருத்துனர்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 6 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 6.5% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 11 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 14 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 7% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 11 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 7.5% ஆகும்.

**மேசன் தொழில்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 3 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 28 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 12% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 16 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 9% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 18 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 12% ஆகும்.

**சாரதி**

பருத்தித்துறை பிரதேசத்தில் 11 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 11.9% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 11 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 15 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 8% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 12 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 10% ஆகும்.

**குறைவான எண்ணிக்கையானோர் சாரதி வேலை செய்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆனால் இவர்களின் சம்பளமும் ஏனைய தொழில்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே காணப்படுகின்றது.**

**கண்ணாடி/ அலுமினிய பொருத்துனர்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 2 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 2.1% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 6 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 2.7% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 8 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 4.5% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 9 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 6.1% ஆகும்.

**ஏனைய தொழில்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 41 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 47.8% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 128 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 49% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 62 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 35.2% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 60 பேர் மேற்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 30.2% ஆகும்.

எமது தொழிலாளர்கள் பல்வேறு தொழில்களுக்கு சென்றிருந்தாலும் தொழில் பெறுகின்ற நாடு, அந்நாட்டில் தொழில் வழங்குனர் கம்பனிகளின் வேதனங்கள் தொழிலின் தன்மை பொன்றவற்றை கருத்தில் கொண்டுதான் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே தொழிலாளர்கள் தொழில்களைத் தெரிவு செய்யும் பொழுது தமக்கு தெரிந்ததும் சான்றளிக்கப்பட்டதுமான தொழில்களோடு கம்பனி கொடுக்கின்ற வேதனங்களை அல்லது தொழில் தருனர் கொடுக்கின்ற வேதனங்களையும் அறிந்து வேலையை நிர்ணயம் செய்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது பொருத்தமுடையதாகும்.

அதேவேளையில் சாரதிகள் கூடிய வருமானத்தை பெறுகின்ற நிலையும் காணப்படுகின்றது. ஏனைய தொழில்களோடு ஒப்பிடுகையில் சாரதிகள் அதிக வருவாயைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. இங்குள்ள தொழிலாளர்கள் தமது தொழில் தெரிவைப்பற்றி தீர்மானிக்கின்ற பொழுது தமக்கு தெரிந்த தொழில்கள் தமது சுழலில் உள்ளவர்கள் செய்கின்ற தொழில்கள் அத்தோடு இலகுவான தொழில்கள் அல்லது அதிகளவு பணம் சம்பாதிக்கக் கூடிய தொழில்கள் என்ற வகையில் தொழில்களை பலர் தெரிவு செய்கின்றார்கள். பல்வேறு காரணிகள் தொழில் தெரிவில் செல்வாக்கு செலுத்துகின்றன போதுமான விழிப்புணர்வு இத்தொழிலாளர்களக்கு இருக்கும் பட்சத்தில் இவர்கள் பொருத்தமான தொழில் தெரிவை மேற் கொண்டு அதிகளவு வருவாயை ஈட்டக்கூடியதாக இருக்கும். அதே வேளையில் தொழில் திறமையை அல்லது அனுபவம் பெறுவதற்கு இவர்கள் காலத்திற்கு ஏற்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும். எதிர்காலத்தில் சானறிதழ் அளிக்கப்படாத தொழில்களுக்கு போதியளவு வருவாய் இருக்காது என்பதை அவர்கள் உணர்ந்து தமது அனுபவங்களை வைத்துக் கொண்டு அவர்களின் தொழிலுக்கான சானறிதழ் பெறுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பது காலத்தின் தேவை ஆகும்.

3. புலம்பெயர்ந்தவர்களின் விவாகநிலை தொடர்பான ஆய்வை மேற்கொண்டபோது

**திருமணமானவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 39 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 42% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 95 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 44% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 79 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 44% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 56 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 36.3% ஆகும்.

**இதன் மூலம் மொத்த எண்ணிக்கையில் அதிகமானவர்கள் திருமணமாகாத நிலையில் சென்றிருப்பதை புள்ளி விபரங்கள் தெளிவாகக் காட்டுகின்றது. இந்நிலையை பார்க்கின்ற பொழுது திருமணமாகாதவர்கள் தொழிலுக்குச் செல்வது என்பது பொருத்தமான விடயமாகவே தென்படுகின்றது. திருமணமான குடும்பங்களில் உள்ள ஆண்கள் அல்லது பெண்கள் வேலைக்கு செல்லுதல் என்பது அக் குடும்பத்தில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி இருக்கின்றது.**

**திருமணமானவர்கள் சிறிய குழந்தைகளைக் கொண்டவர்கள் வெளிநாட்டில் வசிக்கின்ற பொழுது மனைவி குழந்தைகள் பாதிக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கின்றது. யாழ்ப்பாண கலாச்சாரத்திலே பெண் ஒருவர் தனித்திருப்பது சிரமமானது. அப் பெண் தனது தேவைகளை சுதந்திரமாக நிறைவேற்றுவது என்பது சில சமூகங்களில் மறுக்கப்படுவதோ அல்லது அங்கிகரிக்கப்படாத நிலையோ காணப்படுகின்றது. இதன் மூலம் பலரின் விமர்சனத்திற்கு ஆளாகி பெண்கள் மன உழைச்சலுக்கு ஆளாகும் நிலமையும் இருக்கின்றது. பிள்ளைகள் தந்தை இல்லாத நிலையில் தாயின் கட்டுப்பாட்டில் பூரணமாகச் செயற்படுகின்ற நிலை இல்லை தந்தை இருப்பதைப் போன்ற நல்லதொரு சூழ்நிலை உருவாகுவதில்லை எனவே திருமணமாகாதவர்கள் வெளிநாட்டிற்கு செல்லுதல் என்பது குடும்பத்திற்கு பெருமளவு பாதிப்பைக் கொண்டிருக்காது.**

**அதேவேளை இங்குள்ள தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் 4 பிரதேச செயலகர் பிரிவிலும் உள்ள 16 கிராம அலுவலகர் பிரிவுகளிலுமாக 99 பெண் தொழிலாளர்கள் மட்டும் தொழிலுக்கு சென்றிருக்கின்றனர் ஏனையோர் யாவரும் ஆண்களாகவே காணப்படுகின்றார்கள்.**

**4. இம்மக்கள் புலம்பெயர்ந்த தடவைகள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டபோது**

**முதலாவது தடவை**

பருத்தித்துறை பிரதேசத்தில் 44 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 48% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 99 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 45% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 84 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 47% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 66 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 45% ஆகும்.

**இரண்டாவது தடவை**

பருத்தித்துறை பிரதேசத்தில் 31 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 34% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 71 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 32% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 52 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 33% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 52 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 35% ஆகும்.

**மூன்றாவது தடவை**

பருத்தித்துறை பிரதேசத்தில் 10 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 11% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 16 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 7% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 11 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 6% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 17 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 11% ஆகும்.

**மூன்றிற்கு மேற்பட்ட தடவை**

பருத்தித்துறை பிரதேசத்தில் 3 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.3% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 18 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 8% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 7 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 4% ஆகும்.

**இவ் ஆய்வின் மூலம் புலம்பெயர்ந்து மீண்டும் மீண்டும் செல்பவர்களில் சிலர் நல்ல கம்பனி யில் நல்ல சம்பளத்துடன் வேலை செய்பவர்களாகவும் சிலர் தமது நோக்கத்தை சரியானமுறையில் நிறைவேற்ற முடியாமல் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆயினும் இரண்டாவது தடவையிலிருந்து புலம் பெயர்தல் என்பது குறைந்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.**

**5. இப்புலம்பெயர்ந்த குடும்பங்களுக்குள்ளே சமுர்த்தி உதவியினை பெற்றுக்கொள்பவர்கள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டபோது**

**சமுர்த்தி உதவியினை பெற்றுக்கொள்பவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 35 பேர் பெற்றுக்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 38% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 102 பேர் பெற்றுக்கொள்கின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 47% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 88 பேர் பெற்றுக்கொள்கின்றனர்.இது மொத்த எண்ணிக்கையில் 49% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 62 பேர் பெற்றுக்கொள்கின்றனர்.இது மொத்த எண்ணிக்கையில் 42% ஆகும்.

**சமுர்த்தி உதவி கிடைக்காதவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 35 பேரிற்கு கிடைக்கவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 38% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 102 பேரிற்கு கிடைக்கவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 47% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 88 பேரிற்கு கிடைக்கவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 49% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 62 பேரிற்கு கிடைக்கவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 42% ஆகும்.

**சமுர்த்தி பெறுகின்றவர்கள் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளுகின்ற பொழுது இத் தகவல்கள் தெளிவாக எமக்கு வழங்கப்படவில்லை. அதேவேளையில் வெளிநாடு சென்று ஆறு மாதத்தின் பின்னர் சமுர்த்தி கொடுப்பனவுகளை நிறுத்தும் நடைமுறை பல இடங்களில் உள்ளது. அதே வேளையில் சில தொழிலாளர்கள் விதிவிலக்காக ஆறுமாதத்திலும் சரியான தொழிலைப் பெறாமலும் போதிய வருவாயைப் பெறாமலும் இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலையும் இருக்கின்றது. தற்போது அமைச்சினால் இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கான பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகின்றது. இத்தகைய சலுகைகளை சேவைகளை தொழிலாளர்கள் பெறுவதன் மூலமே தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள முடியும்.**

6. **இப்புலம்பெயர்ந்த குடும்பங்களில் புலம்பெயர்தவரின் ஆவணங்களின் பிரதியினை வீட்டில் வைத்திருப்பவர்கள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டபோது**

பருத்தித்துறை பிரதேசத்தில் 44 பேர் வைத்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 48% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 61 பேர் வைத்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 47% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 42 பேர் வைத்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 22.3% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 28 பேர் வைத்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 19% ஆகும்.

**இவ் ஆய்வின் மூலம் புலம்பெயர்ந்தவர்களில் பெருமளவானோரின் வீட்டில் ஆவணங்களின் பிரதிகள் போதுமானதாக இல்லை என்றும் தேவைப்பட்ட முக்கியமான ஆவணங்கள் இவர்களிடம் காணப்படவில்லை என்பதும் ஒரு குறையாக தெரிகின்றது. ஆவணங்களின் முக்கியத்துவம்பற்றி புலம்பெயர் தொழிலாளர் குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கோ விளங்கவில்லை என்பது எமக்கு புரிகிறது. தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்படுகின்ற பொழுது அந்நிய நாட்டில் வாழுகின்ற சூழ்நிலையில் இத்கைய ஆவணங்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் கைகளில் காணப்படுகின்ற பொழுது அவர்களின் பிரச்சனைக்கு தீர்வை காண்பதற்கு இவை உதவியாக இருக்கும் என்ற விழிப்புணர்வு இத் தொழிலாளர்கள் மட்டத்தில் அதிகளவு இல்லை என்பது தெரியவருகின்றது. எனவே இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.**

7. **மீண்டும் மீண்டும் புலம்பெயர்பவர்களில் முதலாவது தொழில் தருனருடன் தொடர்ந்தும் பணிபுரிபவர்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது**

பருத்தித்துறை பிரதேசத்தில் 37 பேர் தொழில் புரிகின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 40% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 7 பேர் தொழில் புரிகின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.2% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 8 பேர் தொழில் புரிகின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 4% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 7 பேர் தொழில் புரிகின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 4.8% ஆகும்.

**வெளிநாட்டில் தொழிலில் ஈடுபடுவோர் முதல் தொழில் தருனரிடம் தொடர்ந்து பணியாற்றுகிறார்களா என்று கேட்ட பொழுது சரியான பதில் எமக்கு கிடைக்கவில்லை.**

8. **இப்புலம்பெயர்ந்தவர்களின் வெளிநாடுசென்ற நோக்கம் பற்றி ஆராய்ந்த பொழுது**

**குடும்பகஸ்ரம், கடன்பட்ட நிலையில் வெளிநாடு சென்றவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 21 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 22.8% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 173 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 80% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 28 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 15.6% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 28 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 18.5% ஆகும்.

**தொழில் வாய்ப்பு இல்லாமையினால் வெளிநாடு சென்றவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 36 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 39.1% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 5 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 2.3% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இவ்வாறு எவரும் குறிப்பிடவில்லை.

கரவெட்டி பிரதேசத்தில் 13 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 8.9% ஆகும்.

**சகோதரிகளின் திருமணத்திற்காக வெளிநாடு சென்றவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 14 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 15.2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 11 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இவ்வாறு எவரும் குறிப்பிடவில்லை.

கரவெட்டி பிரதேசத்தில் 8 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 5.4% ஆகும்.

**ஏனைய காரணங்களினால் புலம்பெயர்ந்தவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 18 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 19.5% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 27 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 12.5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 15 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 7.8% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 18 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 12.3% ஆகும்.

**புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானோர் அவசிய தேவைக்காகவே புலம்பெயர்ந்துள்ளதாக தெரிகின்றது. எனினும் அவர்கள் தமது நோக்கத்தை அடைவதற்கு சரியான முறையில் திட்டமிடாமையினால் அவற்றை நிறைவேற்ற முடியாமல் மீண்டும் மீண்டும் புலம்பெயருகின்ற நிலைக்கு ஆளாகின்றனர். பல்வேறு காரணங்களுக்காக தொழிலாளர்கள் புலம்பெயர்ந்து செல்லுகின்ற நிலை காணப்படுகிறது ஆயினும் அவர்கள் புலம் பெயர்ந்த நோக்கத்தை நிறைவு செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார். புலம் பெயர்ந்த நோக்கத்தை நிறைவு செய்தவர்கள் குறைந்த வீதத்தினராகவே காணப்படுகின்றார்கள். இதற்கு வெளிநாடுகளில் கொடுக்கப்படுகின்ற வேதனக் குறைபாடு இவர்களுடைய தொழில் தெரிவு அல்லது தொழில் வழங்குனர் தெரிவு இலங்கையில் காணப்படுகின்ற விலைவாசி உயர்வு, ஆடம்பர செலவுகள், சிக்கனம் இன்மை செலவுகளை முன்னுரிமைப்படுத்த தெரியாமை பொருளாதார திட்டமிடல் இன்மை போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம். இவற்றின் மீதும் நாம் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.**

**9. குடும்ப செலவுகளுக்கு பணத்தை சமாளிக்கும் விதம் பற்றி ஆராய்ந்த பொழுது**

**வருமானம் போதாமையினால் தாம் மேலதிகமாக கடன் வாங்குபவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 29 பேர் கடன் வாங்குகின்றனர். இது மொத்த எண்ணிக்கையில் 31.5% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 2 பேர் கடன் வாங்குகின்றனர்.இது மொத்த எண்ணிக்கையில் 0.9% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 21 பேர் கடன் வாங்குகின்றனர்.இது மொத்த எண்ணிக்கையில் 11.7% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் இவ்வாறு எவரும் குறிப்பிடவில்லை.

**சுயதொழில் செய்தல், ஏனைய குடும்பத்தவரின் வருமானம் உள்ளவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 15 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 16% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 61 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 28% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 17 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 9.4% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 37 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 25% ஆகும்.

**இவ் ஆய்வின் மூலம் கணிசமானோர் வெளிநாட்டு வருமானத்தில் மட்டும் தங்கி வாழாமல் வேறு வருமானம் ஈட்டும் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். வெளிநாட்டு வருமானத்தில் மட்டும் தங்கிவாழ்வோர் அப்பணம் வராத பட்சத்தில் தெரிந்தவர்களிடம்கடன் வாங்குதல் அல்லது அதிக வட்டிக்கு கடன் வாங்குதல் போன்ற செயற்பாடுகளால் மேலும் கஸ்ரத்தை எதிர்நோக்குகின்ற நிலை காணப்படுகின்றது.**

**10. வெளிநாட்டுக்கு தொழிலுக்கு புலம்பெயர்வுக்கான ஆயத்தங்களை செய்வதற்கான செலவுகள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது**

**நகை அடகு வைத்தல் மூலமாக**

பருத்தித்துறை பிரதேசத்தில் 31 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 33.7% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 53 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 24.5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 43 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 24% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 51 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 35% ஆகும்.

**கடன் வாங்கியதன் மூலமாக**

பருத்தித்துறை பிரதேசத்தில் 38 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 41.3% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 115 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 53% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 112 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 62.5% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 59 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 40% ஆகும்.

**ஏனைய வழிகளில் பெறப்பட்ட பணத்தின் மூலம்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 22 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 23.9% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 35 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 15.3% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 24 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 13.4% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 21 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 14.3% ஆகும்.

**புலம்பெயர்ந்து சென்ற ஆண்களில் பெருமளவானோர் புலம்பெயர்வதற்குரிய செலவிற்கான பணத்தை ஏதோவொரு வகையில் வெளியிலிருந்துதான் திரட்டியுள்ளதாக தெரிகின்றது. இதில் எவரும் சொந்தமாக வைத்திருந்த பணத்தில் சென்றதாக தெரியவில்லை. எனவே இதனடிப்படையில் வறுமையின் காரணமாகவே அதிகமானோர் புலம்பெயர்கின்றதை காணக்கூடியதாக உள்ளது.**

**கடன் வாங்கிச் சென்றவர்களிலும் அதிகமானவர்கள் அதிக வட்டிக்கே கடன் வாங்கியதாக தெரிவித்துள்ளனர். மக்கள் தமது அவசர தேவைகளுக்காக அதிக வட்டியை அறவிடுகின்ற தனியார் வங்கிகளில், தனியார் நிதி நிறுவனங்களில் உடனடிக்கடன்களைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இவ்வாறு இவர்கள் பெற்றுக் கொள்வதற்கான காரணங்களாக அதிகளவு வட்டி என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ளாமை, உடனடித்தேவை நிறைவு செய்யப்படுகின்றமை, கடன்களை வழங்குகின்ற வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் பற்றி போதுமான விளக்கமின்மை அந் நிறுவனங்களிடமிருந்து கடனை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலமை பொறுப்பாக சிந்திக்காமை எதிர்காலம் பற்றிய திட்டமிடல் இன்மை பேன்றவற்றினால் மேலும் மேலும் கடன் சுமைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள் எனவே இவ் விடயங்கள் மீதும் ஆழ்ந்த கவனம் செலுத்தி மக்களை விழிப்புணர்வூட்ட வேண்டியது அவசியமாகும்.**

11. வெளிநாட்டுக்கு தொழிலுக்கு புலம்பெயர்வுக்காக பெற்றுக்கொண்ட பணத்தினை மீளச்செலுத்துதல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது

முழுதாக செலுத்தப்பட்டமை

பருத்தித்துறை பிரதேசத்தில் 22 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 23.9% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 5 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 2.3% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 58 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 39.7% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 21 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 14.3% ஆகும்.

பகுதியளவில் செலுத்தப்பட்டமை

பருத்தித்துறை பிரதேசத்தில் 35 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 38% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 142 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 66% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 72 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 40.2% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 54 பேர் செலுத்தியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 37% ஆகும்.

**கடனை மீளச்செலுத்தாதவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 20 பேர் செலுத்தவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 22% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 21 பேர் செலுத்தவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 9.7% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 16 பேர் செலுத்தவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 8.9% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 15 பேர் செலுத்தவில்லை. இது மொத்த எண்ணிக்கையில் 10.2% ஆகும்

**12. புலம்பெயர் குடும்பங்களின் பொருளாதாரநிலையில் மேம்பட்டிருத்தல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது**

**நன்றாக உள்ளவர்கள்.**

பருத்தித்துறை பிரதேசத்தில் 22 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 23.9% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 14 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 6.5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 47 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 28% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 48 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 27% ஆகும்.

**ஓரளவாக உள்ளவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 37 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 40.2% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 27 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 12.5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 101 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 56% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 34 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 23.3% ஆகும்.

**13. புலம்பெயர் குடும்பங்களின் ஆரோக்கிய நிலை தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது**

**நன்றாக உள்ளவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 44 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 47.8% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 36 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 16.6% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 109 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 60.9% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 99 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 67.8% ஆகும்.

**ஓரளவாக உள்ளவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 5 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 5.4% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 11 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 5% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 51 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 8.4% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 4 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 2.6% ஆகும்.

**நோயுள்ளதாக தெரிவித்தவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 33 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 35.8% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 7 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 3.2% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 15 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 27.9% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 32 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 22% ஆகும்.

**புலம்பெயர்ந்த குடும்பங்களின் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் அவர்களுடைய ஆரோக்கிய குறைபாடு தொடர்பாக மருத்துவ நடவடிக்கைகளுக்காக ஏராளமான பணம் செலவளிப்பதாக தெரிகிறது. அத்தோடு உடல் நிலையும் பாதிப்பதாக இருப்பதால் இவர்கள்கூடுதலாக தமது தொழில்களை செய்ய முடியாமையும் குடும்பத்தில் நிம்மதியின்மையும் காணப்படுகின்றது.**

**14. புலம்பெயர் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி ஆரோக்கிய நிலை பழக்கவழக்கங்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது**

**நன்றாக உள்ளவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 70 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 76% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 93 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 43% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 36 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 20% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 43 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 29.5% ஆகும்.

**நோய் உள்ளவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 19 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 20.7% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 21 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 9.7% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 9 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 5% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் ஒருவர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 0.6% ஆகும்.

**புலம்பெயர்ந்த குடும்பங்களில் உள்ள பிள்ளைகளிடையே காணப்படுகின்ற பழக்கவழக்கங்கள் தொடர்பாகவும் அவர்கள் கல்வி நிலை மேம்பாடு தொடர்பாகவும் ஆய்வினை மேற்கொண்ட பொழுது சில இடங்களில் கணிசமான முன்னேற்றமும் பல இடங்களில் சுமாரான முன்னேற்றமுமே காணப்படுகின்றது. எனவே பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக புலம்பெயர்ந்த நாடுகளுக்கு சென்று உழைத்துவருகின்ற பெற்றோர்கள் இங்கு தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை தொலைத்து விடுகிறார்கள் எனவே புலம் பெயர்வதற்கு முன்பதாக தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி ஆழமாகச் சிந்தித்து முடிவெடுப்பது அவசியமாகும்.**

### 15. வெளிநாட்டில் உள்ளவர் உழைப்பின் மூலம் உங்கள் குடும்ப எதிர்காலம் சிறப்பாக அமையுமா என்பது தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது

**சிறப்பாக அமையும்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 64 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 69.5% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 168 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 78% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 149 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 83% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 52 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 35.6% ஆகும்.

### 16. வெளிநாட்டிலிருந்து வருகின்ற பணத்தை சேமிக்க கூடியதாக உள்ளமை தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட போது

**சேமிக்கக்கூடியதாக உள்ளது**

பருத்தித்துறை பிரதேசத்தில் 28 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 30.4% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 112 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 52% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 85 பேர் தெரிவித்துள்ளனர்.இது மொத்த எண்ணிக்கையில் 47.8% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 5 பேர் தெரிவித்துள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 3.4% ஆகும்.

### 17. Visa மூலமாக அல்லது முகவர் மூலமாக புலம்பெயர்தல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டபோது

**Visa மூலமாக சென்றவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 55 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 59.8% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 153 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 70% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 162 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 90.5% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 57 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 39% ஆகும்.

**முகவர் மூலமாக சென்றவர்கள்**

பருத்தித்துறை பிரதேசத்தில் 31 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 33.7% ஆகும்.

சங்கானை பிரதேசத்தில் 23 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 10.6% ஆகும்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 7 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 4% ஆகும்.

கரவெட்டி பிரதேசத்தில் 6 பேர் சென்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 4.1% ஆகும்.

**யாழ் குடா நாட்டைப் பொறுத்தமட்டில் அதிகளவு எண்ணிக்கை உடையோர் விசா மூலம் வெளிநாடுகளுக்கு செல்வது தான் வழக்கமாக இருக்கிறது. இது இங்குள்ள மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவுவதன் ஊடாகவும் புத்திசாலித்தனமாக செயற்படுவதனூடாகவும் இவ்வாறு புலம்பெயர்வதற்கான வாய்ப்புக்கள் கிட்டி இருக்கிறது. ஆனால் இது எல்லா சந்தர்ப்பத்திலும் பாதகாப்பானது என்று கூறுவதற்கில்லை. எப்படியான விசாவை இவர்கள் பெற்றறுக்கொள்ளுகிறார்கள். இவ் விசாவைப் பெற்றுக்கொண்டு அங்கு செல்பவர்களுக்கு உடனடியாக தொழில் கிடைக்கின்றதா லேும் இவ் விசாவைப் பெறுவதற்காக செலுத்துகின்ற கட்டணங்கள் பொருத்தமுடையதா என்பது பற்றி எல்லாம் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

# அவதானம்

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுடைய வாழ்வு பெரும்பாலும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. முதலில் புலம்பெயர்பவர்கள் யார் என்பதை கவனிக்கின்ற பொழுது பெரும்பாலானவர்களின் கல்வி நிலை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. விதிவிலக்காக சில பட்டதாரிகளும், பொறியியலாளர்களும் மற்றும் சில தொழில்வாண்மை உடையவர்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வது வழமையாயினும் பெரும்பாலானோர் கூலித் தொழிலாளர்களாகவே செல்கின்றார்கள். இவர்களிடம் மேம்பட்ட கல்வியறிவு இருக்கும் பட்சத்தில் இலங்கையில் பணி புரியக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்திருக்கும்.

இவர்களுடைய விழிப்புணர்வு குறைந்த நிலை கல்வித்தரக் குறைபாடு என்பன இவர்களுக்கு இத் தொழில் தொடர்பான பொருத்தமான சரியான தகவல்கள் கிடைப்பதற்கு தடையாக இருக்கின்றது. அவ்வாறு தகவல்களைப் பெற்றுக் கொண்டாலும் இவர்கள் அதைப்பற்றி விளங்கிக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்பதும் இக்குடும்பங்களுடன் கலந்துரையாடிய பொழுது அறியக்கூடியதாக இருந்தது. இவர்களுக்கு வெறுமனே அறிவூட்டுவதோடு மட்டும் நின்றுவிடாமல் இவர்களுக்கு வழங்கப்படுகின்ற தகவல்கள் எளிதில் இவர்களால் புரியக்கூடிய அளவுக்கு தகவல்களை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதே போல சேவை வழங்குவோர் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டாலும் சேவை வழங்குனரிடம் செல்வதற்கு இவர்களுக்குண்டாகும் தயக்கம் அச்சம் போன்றவையும் குறித்த அலுவலகங்களிலோ அல்லது அரச பணியாளர்களிடமோ சென்று தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு தடையாக இருக்கிறது. இவர்களுக்கு வழிகாட்டிகளாகவோ வழிநடத்துபவர்களாகவோ இருப்பவர்கள் வழங்குகின்ற பொருத்தமற்ற பொய்யான தகவல்கள் இவர்களை தவறான பாதைக்கு இட்டுச் சென்றதையும் நாம் அவதானித்தோம்.

பலர் தொழிலுக்காக புலம்பெயருகின்ற பொழுது தாம் அங்குள்ள நிலமைகளை எளிதில் சமாளிக்கலாம் என்று நம்பிக்கையோடு இருப்பதையும் அவதானிக்கக் கூடியவாறு இருந்தது. வேறு சிலரோ எங்ககளுக்கு எல்லாம் தெரியும் நாங்கள் ஒரு தடவை போய் வந்தவர்கள் தான் என்ற எண்ணத்தோடு செயற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கூர்ந்த அவதானத்துடனும் சரியான விழிப்புணர்வுடனும் சரியான திட்டமிடலுடனும் தமது பயணத்தை அமைத்துக் கொள்வார்களாயின் அவர்கள் தொழிலுக்கு சென்ற நோக்கம் நிறைவேறும் என்பது எமது அவதானத்தின் மூலம் கண்டறியப்பட்ட உண்மையாகும்.

இவர்கள் தமது பயண ஆயத்தங்களுக்காக வேண்டாத பல செலவுகளை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பாஸ்போட் பெறுதல், விசா கட்டணங்களை செலுத்துதல் அல்லது வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மை பதிவு செய்தல் போன்றவற்றிற்கு இவர்கள் மேலதிக பணத்தை செலவழிப்பதும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கடவுச் சீட்டு பெறுகின்ற பொழுது இவர்கள்அவசர அவசரமாக கொழும்புக்கு சென்று மேலதிகமாக 10,000 தொடக்கம் சுமார் 20,000 வரையில் அனாவசியமாக செலவு செய்ய வேண்டி இருககின்றது. வெளிநாட்டிற்கு போவதற்கு திட்டமிடுகின்றவர்கள் கடவுச் சீட்டை முன்கூட்டியே எடுத்து வைத்திருப்பது என்பது பொருத்தமான ஒருகாரியமாகும். இதன் மூலம் வேண்டாத செலவீனங்களை தவிர்த்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் இவ் பாஸ்போட் படிவத்தை நிரப்புவதற்கு, இதற்கான இணை ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவர்கள் ஏராளமான பணத்தை வீணாக செலவழிப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

புலம்பெயரப்போகும் நாட்டைப்பற்றி பலர் பலவிதமாக கூறினாலும் பெரும்பாலான தொழிலாளர்கள் அங்குள்ள நிலைகளை முக்கியத்துவப்படுத்தி கவனத்தில் கொள்வதில்லை என்பது அறியக்கிடைக்கின்றது. அங்குள்ள காலநிலை எப்படி தமது உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும் என்றோ அங்குள்ள உணவுப்பழக்கவழக்கங்கள் கலாச்சாரம் தங்களை எவ்வாறு பாதிக்கப்போகிறது என்பதை இட்டோ அவர்கள் கூடிய கவனம் செலுத்தாமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. தாம்போய் இறங்கியவுடனே தமக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளும் அங்குள்ள தமது உறவினர்களோ நண்பர்களோ செய்வார்கள் என்று அதீதமாக நம்புகின்ற நிலமையும் காணப்படுகின்றது. அங்குள்ளவர்களும் இவர்களைப் போன்ற ஒரு தொழிலளியாக இருப்பதன் காரணமாக அடிப்படையிலுள்ள பல விடயங்கள் அவர்களாலும் விளங்கிக் கொள்ள முடியாததாக இருக்கும். ஆகவே இங்கிருந்து செல்பவர்களுக்கு போதிய வழிகாட்டல்கள் இல்லாமல் அங்குள்ளவர்கள் காணப்படுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. அங்குள்ள தொழில்கள் பற்றியும் பூரணமான தகவல்கள் இவர்களுக்கு

தெரியவில்லை என்பதும் அங்கு சென்ற பிறகுதான் இந் நிலமைகளை இவர்களால் அறியக்கூடியதாக இருக்கிறது என்பதும் நாம் கண்டு கொண்டோம்.

அதே வேளையில் இங்கு இயந்திரங்கள் கருவிகள் பயன்படுத்துவதை விட அங்கு இவற்றை பயன்படுத்தி தொழில் செய்வது இலகுவானது என்று சிலர் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இக் கருவிகளை கையாளக் கூடிய அறிவோ அனுபவமோ இவர்களுக்கு இல்லாதிருப்பது ஒரு குறைபாடாகவே தெரிகிறது. மிகக் குறைந்த சதவீதத்தினராகிய தொழிலாளர்கள் மிகவும் நுட்பத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் செயற்பட்டு தம்மை நன்றாக வளப்படுத்தி கொண்டதுடன் ஏனையோருக்கும் உதவியிருக்கிறார்கள் இவர்கள்தான் அங்கிருந்து விசாவைப் பெற்று அனுப்புபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

பெரும்பாலான விசாக்கள் அங்கிருந்து சுற்றுலா விசாவாகவே அனுப்பப்படுகின்றது. இதை அனுப்புபவரோ அல்லது பெறுபவரோ இந்த விசா எதற்குரியது என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளாமையும் தெரிகிறது. இதைப்பற்றிய அறிவு பெரும்பாலான தொழிலாளர்களுக்கு இல்லை என்பதும் நாம் அறியக் கூடியதாக இருந்தது. கணிசமான தொழிலாளர்கள் அங்கு சென்ற பின்னர் நாம் பொருத்தமற்ற இடத்திற்கு வந்துவிட்டோம் புதிய சூழ்நிலையில் தாக்குப்பிடிப்பது என்பது சிரமமான காரியம் என்பதை உணர்ந்தும் நாம் பணம்கட்டி வந்துவிட்டோம் குடும்ப நிலமையும் மிக மோசமாக இருக்கின்றது இனி எந்த முகத்தோடு அங்கு செல்லப்போகிறோம் என்பவை காரணமாக நிலமையை சகித்துக் கொண்டு சமாளித்துக் கொண்டு புலம்பெயர் நாடுகளில் தொழிலாற்றி வருவதையும் அறியக் கூடியதாக இருந்தது.

இங்கும் சரி புலம்பெயர்ந்த நாட்டிலும் சரி தமக்கு ஒரு சிக்கல் பிரச்சனை என்று வருகின்ற பொழுது அவர்கள் முறைப்பாடு செய்வதிலோ அதில் நிவாரணம் பெறுவதிலோ அதிக ஆர்வம் காட்டாமை தெரிகின்றது. அதற்குப் பிரதான காரணம் தம்முடைய முறைப்பாட்டை எவரிடம் எவ்வாறு வழங்குவது என்பது தெரியாமல் இருப்பது. தற்போது இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியும் கூட தாம் முறைப்பாடுகளை மேற்கொண்டாலும் இம் முறையீட்டின் காரணமாக தமக்கு சாதகமான நிலமை ஒன்று தோற்றுவிக்கப்படுமா அல்லது தமக்கு நிவாரணம் கிடைக்குமா என்ற சந்தேகம் அவர்களுக்கு அதிகமாக இருக்கின்றது.

அரச செயற்பாட்டின் மீதும் நிறுவனங்களின் செயற்பாட்டின் மீதும் இத் தொழிலாளர்கள் அதிகளவு நம்பிக்கை வைத்ததாக தெரியவில்லை. தமது பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கால தாமதமாகும் என தெரியும் போது இந்தப்பிரச்சனைக்குப்பின்னால் நாம் அலைந்து திரிய வேண்டி வரும் என்பதும் இதன் பிரதிவிளைவாக நாம் தண்டிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சமும் இவர்கள் இப்படியான பாதிப்புக்களுக்கு நிவாரணம் தேடும் முயற்சிகளில் ஈடுபடமைக்கு காரணமாகவும் இருக்கிறது.

வெளிநாடுகளில் பணிபுரியும் போழுது அந் நாட்டுக்குரிய நடவடிக்கைகளுக்கு ஏற்ப சட்டதிட்டங்களுக்கேற்ப எம்மை மாற்றிக் கொள்ள முடியாமலோ அல்லது அதை மேலோட்டமாகப் பார்ப்பதினாலோ சில பிரச்சனைகளுக்கு எமது தொழிலாளர்கள் ஆளாகின்றனர். அதிலிருந்து விடுபடுவதற்கு பதிலாக புதிய பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள். குறிப்பாக ஒரு வேலையில் இருந்து இன்னொரு வேலைக்கு மாறுதல் என்பது அவர்களுக்கு ஒரு சாதாரண விடயமாக நோக்கப்படுகின்றது. ஆனால் அதன் விளைவுகளோ பாரதூரமாக வருகின்ற பொழுது தான் அவர்களால் அதை உணர முடிகின்றது.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையிலே 95 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் ஆண்கள் தான் புலம்பெயர்ந்து இருக்கிறார்கள் ஆனால் அவர்களது குடும்பத்தில் இதன் காரணமாக பல புதிய சிக்கல்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. குறிப்பாக இளம் குடும்பத்தவர்கள் குடும்பத்தை விட்டு பிரிகின்ற பொழுது இங்குள்ள இளம் மனைவியர்களை சமூகம் நோக்குகின்ற பார்வையும் இதனால் அவர்களுடைய வாழ்க்கை சீரழிவதும் அங்கொன்று இங்கொன்றாக அதிகரித்து வருகின்றதை அவதானிக்கின்றோம். அதே வேளையில் உழைக்கும் குடும்பத்தலைவர் இங்கில்லாத நிலையில் அவர்களுடைய பிள்ளைகள் தாயினுடைய சொற் கேட்டு நடப்பதும் அல்லது தமது கடமைகளை செய்வது கல்வி கற்பது என்பவற்றில் பாரிய பின்னடைவும் புதிய குழப்பங்களும் ஏற்பட்டுள்ளது கணிசமாகன குடும்பங்களிடையே நிதி முகாமைதுவம் என்பது மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. அதேவேளையில் இங்குள்ள நடைமுறைகள் கலாச்சாரத்தின் பிரகாரம் தமது குடும்பத்திலுள்ள பலவீனங்களை வெளியில் சொல்வதோ அதே வேளையில் இதை சமாளித்து நடத்துவதற்கோ தெரியாத நிலையில் இக் குடும்பப் பெண்கள் வசித்து வருவதும் படிப்படியாக இவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாவதும் அறியக் கூடியதாக இருக்கின்றது. கூட்டுக்குடும்பமாக இருக்கிறவர்களுடைய சூழலில் இப்படியான மன அழுத்தங்கள் குறைவாகவே காணப்படுகின்றது

உழைக்கும் கணவன் இங்கு இல்லாத நிலையில் பாரிய புதிய முரண்பாடுகளும் இங்கு ஏற்படுத்தப்படுகின்றது. இங்குள்ள குடும்ப பெண்களுடைய நிலையை ஆராய்ந்து பார்ப்போமானால் மிக பாரதூரமான சிக்கல்களை இக்குடும்பங்கள் எதிர் கொள்வதும் இது சமூக ரீதியான பல கலாச்சார சீரழிவுக்கு வழிவகிப்பதும் எதிர்காலத்தில் பிள்ளைகளுடைய வாழ்வு சீரழிக்கப்படுவதற்கும் காரணமாக இருக்கின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இது பற்றி மிக ஆழமான ஆய்வு ஒன்றை பெண்கள் சார்ந்த அதில் ஆர்வமுள்ள அனுபவமுள்ள அமைப்புக்கள் செய்வார்களாயின் இந் நிலை பற்றிய தெளிவான தகவல்களை கண்டறியலாம்.

குடும்பத் தலைவர் வெளிநாடு செல்லுகின்ற போது பெண்கள் பல்வகை சுமைகளை சுமப்பவர்களாக மாறிவருவதும் இங்கு அவதானிக்கத்தக்கது. பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு செல்லல் அல்லது விசேட வகுப்புகளுக்கு அழைத்து செல்லுதல், வீட்டுக்கு தேவையான சமையல் அத்தியவசிய பொருட்களை வாங்குதற்கு வெளியில் செல்லல் தமது ஏனைய குடும்ப மருத்துவ தேவைகளுக்காக வெளியே செல்லல் போன்ற கடமைகளைச் செய்யும்போது பெண்கள் அடிக்கடிவெளியே சென்று வருவதை சமூகம் தப்பான கண்ணோட்டத்திலே பார்கிறது. அத்தோடு கணவனின் பிரிவால் ஏற்படும் மனவழுத்தம் வேலைப்பழுவால் ஏற்பட்ட உடல் சுமை போன்றன பல்வேறு நெருக்கடிகளுக்கு அப் பெண்களைத் தள்ளிவிடுகின்றது. சிலவேளைகளில் எதிர்காலத்தில் கணவன் பணத்தை உழைத்துக்கொண்டு வருகின்ற வேளையில் மனைவியினுடைய இத்தகைய அழுத்தம் காரணமாக குடும்பத்தில் பல பிரச்சனைகள் தோன்றுவதற்கும் அத்தோடு குடும்பம் மீள் இணைந்து சந்தோசமாக வாழ்வதற்கும் சாதகமான நிலை இருக்குமா என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

## பரிந்துரை

புலம்பெயர்வதற்கு தீர்மானிக்கின்ற பொழுது எந்த நாட்டுக்கு போவது என்பது தொடர்பான போதுமான விழிப்புணர்வு தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டும். ஏனெனில் பல்வேறு நாடுகளில் வெவ்வேறுபட்ட சூழ்நிலைகள் நிலவுகின்றது. அந்நாடுகளிலுள்ள சட்டதிட்டங்கள், கலாச்சாரம், தொழிலாளர்கள் சட்டங்கள் அந் நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஆதரவு போன்றவை இத் தொழிலாளர்களை சாதகமாகவோ பாதகமாகவோ பாதிக்கின்றது. எனவே இவற்றைக் கருத்தில் எடுத்துத் தான் எந்த நாட்டிற்கு புலம் பெயர்தல் என்பது தொடர்பான தீர்மானங்களை தொழிலாளர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

என்ன தொழிலைதெரிவு செய்வது என்பது தொடர்பாக தொழிலாளர்கள் தீர்மானம் எடுக்கின்ற பொழுது தமக்கு தொழில்களில் இருக்கின்ற அனுபவங்கள் செல்லவுள்ள நாட்டிலுள்ள சம்பளம், தொழிலுக்கான சான்றிதழ் தொழில் தருனருடைய நடவடிக்கைகள், நடைமுறைகள் போன்றவை தொழிலை தெரிவு செய்வதற்கு பெரும்பாலும் உதவுகின்றன. வழமையாக ஏற்கனவே தெரிந்த தொழிலொன்றுக்காக புலம்பெயர்ந்த நாடுகளுக்கு செல்லுவது தான் வழக்கம் ஆயினும் கூட இளையோர்கள் தொழிலை தெரிவு செய்து புலம்பெயருகின்ற பொழுது அவர்களுக்கு பல்வேறு வாய்ப்புக்கள் இருப்பதையும் மேற்குறித்த விடயங்களை கருத்தில் எடுத்தும் தொழில் தெரிவை மேற்கொள்ளுகின்ற பொழுது கணிசமான வருவாய் கிடைப்பதற்கான வழி உள்ளது. எனவே இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

புலம்பெயர்பவர்கள் திருமணம் முடித்தவர்களானால் புலம்பெயர்வது தொடர்பாக மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. புலம்பெயர்ந்தவர்களின் குடும்பங்களில் இருக்கின்ற சிறுவர்களுடைய கல்வி, பழக்கவழக்கங்கள் எதிர்காலம் போன்றவையும் ஆண்கள் புலம் பெயருகின்ற பொழுது பெண்களுக்கு இருக்கின்ற வேலைச்சுமை, சமூகத்தின் பார்வை, மன ஆழுத்தம் போன்றவையும் அக்குடும்பத்தில் இருக்கின்ற முதியவர்களுடைய நிலையும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குடும்பங்களை மிக ஆழமாக நோக்குகின்ற பொழுது யாழ்ப்பாணத்து சமூகத்திலே புலம்பெயர்த குடும்பங்களில் ஆண்கள் புலம்பெயர்ந்த நிலையில் பெண்களின் வாழ்க்கை நிலையில் பெருமளவு கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. இவர்களுடைய மனவழுத்தம், வருமானக் குறைபாடு, பிள்ளைகளைக் கையாள முடியாத நிலை, முதியோர்களை பராமரிக்க முடியாத நிலை, வேலைச்சுமை என்பன கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் புலம்பெயர நேருகின்ற பொழுது தாம் பணியாற்றிய அதே கம்பனியில் தொடர்ந்தும் வேலைசெய்வதனுடாகக் கம்பனியின் நம்பிக்கையைப் பெறுவதுடன் வேலை அனுபவைத்தையும் அத்தோடு சம்பள அதிகரிப்பையும் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேவேளையில் ஒவ்வொரு தடவையும் புலம்பெயருகின்ற பொழுது தமது வேலை அனுபவத்தோடு தமது சம்பளத்தை உயர்த்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் புலம்பெயருகின்ற தொழிலாளர்கள் உணர வேண்டும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுடைய குடும்பத்தில் சமுர்த்தி நிவாரணம் போன்றவை நிறுத்தப்படுகின்ற பொழுதோ அல்லது வெளிநாட்டில் இருந்து உழைத்து அனுப்புகின்ற பணம் போதாமையாக இருக்கின்ற பொழுதோ அல்லது வேறு விதமாக பெருளாதார நெருக்கடி ஏற்படுகின்ற பொழுதோ அல்லது குடும்பச் செலவுகள் அதிகரிக்கின்ற பொழுதோ மாற்று வழிகளைப்ப பற்றிய சிந்தனையும் அவர்களுக்கு பொருத்தாமான வழிகாட்டலும் மிகவும் தேவையாக இருக்கின்றது. இல்லாவிட்டால் பொருளாதார நெருக்கடியோடு குடும்பச் சீரழிவும் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுடைய குடும்பங்களில் புலம்பெயர்தல் தொடர்பான ஆவணங்கள் தொழில் தொடர்பான ஆவணங்கள் என்பன இருப்பதைக் கட்டாயப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பல தொழிலாளர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் சிக்கல்களை எதிர் கொண்டு அவல நிலை ஏற்படுகின்ற சூழ்நிலைக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருப்பது அவர்கள் தொடர்பான விபரங்கள், தகவல்கள் ஆவணங்கள் எதுவும் அவர்களின் குடும்பத்தவர்களின் கைகளில் இல்லாமை ஆகும். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்கப்படுதல் வெண்டும்.

தற்போது அதிகமான குடும்பங்களில் **SMART** தொலைபேசி பாவிக்கப்படுவதன் காரணமாக இவ் ஆவணங்களின் பிரதிகளை போட்டோ பிரதிகளாகவோ அல்லது **Drop box** என்ற சாதனத்தில்

வைத்துக் கொள்வதன் மூலமோ இக்குடும்பங்களில் இத்தகைய ஆவணங்களின் பயன்பாட்டை உறுதிசெய்து கொள்ள முடியும்.

புலம்பெயர்ந்த நோக்கம் தொடர்பாக ஆராய்ந்த பொழுது புலம்பெயர்ந்தவர்கள் தமதுநோக்கத்தை நிறைவு செய்கிறார்களா என்பதை ஆழமாகப் பார்க்கின்ற பொழுது அவர்கள் இந் நோக்கத்தை அடைவதற்குத் தடையாகப் பல்வேறு காரணிகள் காணப்பட்டன மிக முக்கியமான காரணியாக அவர்கள் புலம் பெயர்ந்த நோக்கத்தை மறந்துவிட்டு தமக்கு கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு பொருத்தமற்ற செலவுகளைச் செய்வதும் திட்டமிடாமையும் குடும்பத்தினுடைய நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்படாமையும் குடும்ப உறுப்பினர்களுடைய புரிந்துணர்வு அற்ற நிலையும் இவற்றிற்கு காரணமாக அவதானிக்கப்பட்டது. எனவே இவ்விடயங்களில் கூடியகவனம் எடுத்து குடும்பத்தின் சிக்கனத்தை அதிகரித்து சேமிப்பை அதிகரித்து புலம்பெயர்ந்ததின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கு இக்குடும்பங்கள் கவனமாகத் திட்டமிடவேண்டியது அவசியமாக இருக்கிறது.

வெளிநாடு செல்வதற்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ அல்லது முதலீட்டுக்கோ கடனைப் பெறுகின்ற பொழுது அதிக வட்டி வசூலிக்கின்ற தனியார் கம்பனிகளை நாடாமல் குறைந்த வட்டிக்கு பணம் கொடுக்கும் நிறுவனங்களையோ அல்லது வங்கிகளையோ நாடுவதற்கு உரிய விழிப்புணர்வை இக் குடும்பங்களுக்கு வழங்குதல் அவசியமாகும். பெரும்பாலான குடும்பங்கள் தமது உழைப்பின் பெரும் பகுதியை வட்டிப்பணத்திற்காகவே செலவிடுகின்ற நிலமை காணப்படுகின்றது. எனவே இவ் விடயத்தில் கூடிய கவனம் செலத்தப்படதல் வெண்டும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களின் அனைத்து விடயங்களிலும் போதிய கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். பிள்ளைகள் எதிர்காலம், கல்வி, பழக்கவழக்கங்கள் போன்றவை முதியவர்களின் ஆரோக்கியம் போன்றவை குடும்ப பொறுப்பிலுள்ள பெண்களின் சுமை மன அழுத்தம் பொருளாதாரப் பிரச்சனைகள் போன்றவை யாவற்றிற்கும் தீர்வு காணப் போதிய ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அன்றி இக் குடும்பங்களின் வாழ்வு மேலோங்குவது சாத்தியமில்லை.

யாழ்ப்பாணத்தில் அதிகளவானோர் விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடு செல்வது காணப்படினும் கூட அது பற்றிய போதிய விளக்கமும் விழிப்புணர்வும் இக்குடும்பத்தவர்களுக்கு இல்லை என்றே தெரிகிறது. எவ்வகையான விசா என்பதையோ இதற்காக செலவிடப்படும் பணம் பொருத்தமுடையதா என்பதையோ இவை சட்டப்படி செல்லுபடியானது என்பதையோ இக் குடும்பத்தினர் அறிந்திருக்கவில்லை எனவே இவ் விடயம் தொடர்பான விழிப்புணர்வு இக் குடும்பங்களுக்கு அவசியம் தேவைப்படுகின்றது.

# முடிவுரை

இவ்ஆய்வில் பெறப்பட்ட தகவல்கள் அவதானங்கள் பரிந்துரைகள் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டு மேலும் ஆழமாக இவ் விடயங்களில் கவனம் செலத்துவதன் ஊடாகப் புலம்பெயர் தொழிலாளர்களுடைய வாழ்வில் முன்னேற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்த முடியும். எனவே இவர்களுக்கான செயல் திட்டங்களை வடிவமைக்கின்ற பொழுது இவ் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் பாதுகாப்பான புலம்பெயர்வு செயற் திட்டமானது வெற்றிகரமான ஒரு திட்டமாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களை மேம்படுத்தும் ஒரு திட்டமாக நீடித்து நிலைக்கின்ற வகையில் அமையும் என்பது எமது அபிப்பிராயமாகும்.

# நன்றி!